# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

### பிரிவு 9 ( 2010 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 14)

## விவிலிய வினாவிடைப் போட்டி

1. கிறிஸ்தவர்கள் அதிமேன்மையாகவும், புனிதமாகவும் மதித்து பாதுகாக்க வேண்டிய நூல் எது? **திருவிவிலியம்**
2. கத்தோலிக்க திருவிவிலியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டநூல்களின் எண்ணிக்கை ? **73**
3. திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் உள்ள நூல்கள் எத்தனை? **46**
4. திருவிவிலியத்தில் தன் இனவிடுதலைக்காக போராடிய பெண்கள் யாவர்? **யூதித், எஸ்தர்**
5. காயின் தன் சகோதரன் ஆபேலைக் கொலை செய்த இடம் எது? **வயல்வெளி**
6. நற்செய்தி நூல்கள் எத்தனை? **4**
7. இஸ்ராயேல் மக்கள் பார்வோனுக்காக கட்டிய களஞ்சி நகரங்கள் எவை? **பித்தோம், இராம்சேசு**
8. எபிரேயத் தாதியர்களின் பெயர்கள் என்ன? **சிப்ரா, பூவா**
9. கடவுளால் எகிப்தியருக்கு வழங்கப்பட்ட துன்பங்கள் எத்தனை? **10**
10. எகிப்தியருக்கு வழங்கப்பட்ட துன்பங்களுள் ஏழாவது என்ன? **கல்மழை**
11. திருஅவை வழியாடு எத்தனை காலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன? **6**
12. திரு அவை வழிபாட்டு காலங்களில் மனமாற்றதின் இரு காலங்களை எவை? **திருவருகைக்காலம், தவக்காலம்**
13. திருவெளிப்பாட்டு நூலின் எழுத்தாளர் யார்? **புனித யோவான்**
14. லூக்கா நற்செய்தியின் எழுத்தாளர் யார்? **புனித லூக்கா**
15. புனித பவுலின் மறைத்தூதுப்பணியைக் குறிப்பிடும் நூல் எது? **திருத்தூதுப் பணி**
16. திருத்தூதர்பணி நூலை எழுதியவர் யார்? **புனித் லூக்கா**
17. இறையாட்சியின் நற்செய்தி என அழைக்கப்படும் நற்செய்தி எது? **மத்தேயு நற்செய்தி**
18. ‘‘என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது’’ எத்தனையாவது கட்டளை? **முதலாவது**
19. ஆயனாக வாழ்ந்த ஆபிரகாமின் பெயர் என்ன? **நம்பிக்கையின் தந்தை**
20. இறைவனுக்கு உகந்த பலி எது? **நொருங்குண்ட உள்ளம்**
21. யாருடைய பெயரால் திருமுழுக்கு பெறுகின்றோம்? **தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால்**
22. இஸ்ராயேலர் தமது எகிப்தில் அடிமைத்தனத்தையும் அதிலிருந்து வெளியேறியதையும் நினைவு கூர கொண்டாடிய விழா எது? **பாஸ்கா விழா.**
23. இஸ்ராயேலரின் பலிகளில் மிக முக்கிய பலியாகக் கருதப்பட்டது எப்பலி? **மிருகப்பலி.**
24. இஸ்ராயேலர் பலி செலுத்துவதன் நோக்கம் என்ன? **பாவங்களுக்குப் பரிகாரமாக, இறைவனோடு உறவை ஏற்படுத்துவதற்காக.**
25. இஸ்ராயேலரின் பலிகளின் பிரிவுகள் எவை? அவை எவை? **இருபிரிவுகள். 1. எரிபலி. 2. போசனப்பலி.**
26. இஸ்ராயேலர் எரிபலிக்கு பயன்படுத்தியவை யாவை? **காளைகள், செம்மறி(வெள்ளாடு), பறவைகள்(காட்டுப்புறா, மாடப்புறா)**
27. திருவழிபாடுகளில் அதியுயர் வழிபாடாக அமைவது எது? **திருப்பலி**
28. இயேசுவின் கல்வாரிப்பலி எங்கு நினைவு கூரப்படுகின்றது? **திருப்பலியில்**
29. இயேசு எதில் உயிருடன் பிரசன்னமாயிருக்கின்றார்? **நற்கருணையில்.**
30. திருப்பலியில் நாம் நினைவுகூர்வது எதை? **இயேசுவின் இராவுணவுச் சடங்கை, இயேசுவின் கல்வாரிப் பலியை.**
31. கத்தோலிக்க திருவழிபாட்டின் ஊற்றும் உச்சியுமாயிருப்பது எது? **நற்கருணை.**
32. ‘அருளடையாளங்களின் அருளடையாளம்’ எனப்படுவது யாது? **நற்கருணை.**
33. கிறிஸ்தவர்கள் எமது ஆன்மீக உணவு எது? **நற்கருணை.**
34. ‘‘நானே வாழ்வு தரும் உணவு’’ என்பதில் வாழ்வு தரும் உணவாக சித்தரிக்கப்படுபவர் யார்? **இயேசு**
35. ‘‘கொலை செய்யாதே’’ எத்தனையாம் கட்டளை? **5**
36. அருளடையாளங்கள் எத்தனை? **7**
37. பணிக்குருத்துவத்தின் வகைகள் எவை? **மறைமாவட்ட குருக்கள், துறவற சபைக் குருக்கள்**
38. கடவுளின் பிள்ளை எனும் உரிமையை பெற்றுத் தந்த அருளடையாளம் எது? **திருமுழுக்கு**
39. படைப்புச் செயலில் பங்கு கொள்ளச்செய்யும் அருளடையாளம் எது? **திருமணம்**
40. வாக்குறுதி அளிக்கும் அருளடையாளங்கள் எவை? **திருமுழுக்கு, உறுதிபூசுதல், திருமணம், குருத்துவம்**
41. இறைவனோடும், மனிதரோடும் முறிந்த உறவை மீண்டும் புதுப்பிக்கும் அருளடையாளம் எது? **ஒப்புரவு**

42. ஒருவர் இயேசுவோடும், பிற மனிதர்களோடும் உறவில் ஒன்றிணைவதை மையமாகக் கொண்ட அருளடையாளம் எது? **நற்கருணை**
43. குணமளிக்கும் அருளடையாளங்கள் எவை? **ஒப்புரவு, நோயில் பூசுதல்**
44. 10 கட்டளைகளில் ஏழைகளை அன்பு செய்யும் படி இறைவன் எக்கட்டளைகள் மூலம் கட்டளையிடுகின்றார்? **7, 10**
45. திருக்குடும்பத்தின் அங்கத்தவர்கள் யாவர்? **இயேசு, மரியா, யோசேப்பு**
46. திருத்துவத்தின் அங்கத்தவர்களைள் யாவர்? **கடவுள், இயேசு, தூய ஆவியார்**
47. பரபாஸ் எனும் சிறைக்கைதியை விடுதலை செய்து இயேசுவை சிலுவையில் அறையும் படி தீர்ப்பிட்டவர் யார்? **ஆளுனர் பிலாத்து**
48. இயேசுவின் உயிர்ப்புக்கு முதல் சாட்சியாக விளங்கியவர் யார்? **மகதலா மரியா**
49. திருத்தூதர்களில் முதல் மறைசாட்சியானவர் யார்? **புனித யாக்கோபு**
50. ''என் ஆண்டவரே என் தேவனே'' என அறிக்கையிட்டு இறைநம்பிக்கையை வெளிப்படுத்திய திருத்தூதர் யார்? **புனித தோமா**
51. ''பிறஇனத்தாரின் திருத்தூதர்'' என அழைக்கப்படுபவர் யார்? **புனித பவுல்**
52. புனித பவுலுக்கு திருமுழுக்கு கொடுத்தவர் யார்? **அனனியா**
**53.** பேரரசு நீரோவின் கலாபனையில் தலை வெட்டப்ப்டு கொலை செய்யப்பட்டவர் யார்? **புனித பவுல்**
54. தூய பவுல் எந்தக் கோத்திரத்தை சார்ந்தவர்? **பென்யமின்**
55. பவுலின் முதலாம் தூதுரைப் பயணத்தில் பயணத்தோழராக சென்றவர் யார்? **புனித பர்னபா**
**56.** தொழிலாளர்களின் பாதுகாவலராக திருஅவையினால் அங்கீகாரம் செய்யப்பட்ட புனிதர் யார்? **புனித சூசையப்பர்**
**57.** இயேசு எரிக்கோவில் பார்வையற்று இருந்தவரை குணமாக்கிய போது கூறிய வார்த்தை என்ன? **உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று**
58. இறையாட்சியின் மதிப்பீடுகளை முன்வைக்கும் உவமைகளில் ஒன்று? **கடுகு விதை உவமை**
59. இறைவன் பாவிகளை தேடிச் சென்று அவர்களை அரவணைத்து காக்கின்றார் என்பதை விளக்கும் உவமை எது? **காணாமற்போன ஆடு**
60. மனமாற்றத்தினால் இறைவனிடம் செல்ல வேண்டும் என்பதை உணர்த்த இயேசு கூறிய உவமை எது? **ஊதாரி மைந்தன் உவமை**
61. ஊதாரி மைந்தன் உவமையில் பொறுப்பற்று வாழ்ந்து பின் தவறை உணர்ந்து தந்தையிடம் திரும்பி வந்தவர் யார்? **இளைய மகன்**
62. ''நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்'' என இயேசுவின் இறைதன்மையை அறிக்கையிட்ட திருத்தூதர் யார்? **புனித பேதுரு**
63. நற்செய்தியாளர் நால்வரும் குறிப்பிடும் ஒரே ஒரு அருங்குறி எது? **அப்பங்களை பலுகச்செய்தல்**
64. அப்பங்களை பலுகச் செய்த நிகழ்வில் சிறுவன் அப்பமும் மீனும் வைத்திருப்பதை இயேசுவிடம் எடுத்துக்கூறிய திருத்தூதர் யார்? **அந்திரேயா**
**65.** திரு அவையின் ஒருமைப்பாட்டிற்கு ஊற்றாகவும் முன்மாதிரிகையாகவும் இருப்பது எது? **மூவொரு கடவுளின் ஒன்றிப்பு.**
66. திரு அவையின் எக்காலத்திற்கும் தலையாயிருப்பது யார்? **கிறிஸ்து.**
67. கிறிஸ்துவின் மறையுடல் என உருவகப்படுத்துவது எதை? **திரு அவையை.**
**68.** இயேசு சிலுவை சுமந்து சென்ற போது அவரது முகத்தை வெண்துணியால் துடைத்தவர் யார்? **வெரோனிக்கா**
**69.** இயேசுவின் சிலுவையடியில் நின்றவர்கள் யார்? **தாய் மரியாள், குளோப்பாவின் மனைவி மரியா, மகதலா மரியா, திருத்தூதர் யோவான்**
70. இயேசு இறந்து எத்தனையாம் நாள் உயிர்தெழுந்தார்? **மூன்றாம் நாள்**

## இடைவெளி நிரப்புக

71. '' ………….. இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை.'' - **தந்தையே!** (லூக்கா23:34)
72. ''நீர் இன்று …… பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்லுகின்றேன்'' - **என்னோடு** (லூக்கா 23: 43)
73. '' இவரே ……தாய்'' - **உம்** (யோவான்19:26-27)
74. '' ஏலி ……… லேமா சபக்தானி'' - **ஏலி** (மத்தேயு 27:46)
75. '' தந்தையே உம் கையில் என் ……… **ஒப்புடைக்கின்றேன்''** - உயிரை (லூக்24: 46)
76. ''உங்களுக்கு ……… உரித்தாகுக'' - **அமைதி** (லூக்24: 36)
77. '' இன்று இந்த வீட்டிற்கு ……… உண்டாயிற்று'' **- மீட்பு** (லூக் 19: 8)
78. '' அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் ………. செய்தேன்'' - **பாவம்** (லூக் 15: 21)
79. '' இது உங்களுக்காக கொடுக்கப்படும் ………. உடல்'' - **எனது** (லூக்22:19
80. '' இளைஞனே நான் ………. சொல்லுகிறேன், எழுந்திடு'' - **உனக்கு** (லூக் 7: 15)

## பேச்சுப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

**மூவேளைச் செபம்**

கிறிஸ்து மனிதனானார் என்பதை நினைவூட்ட மூன்று வேளைகளிலும் அதாவது காலை, மதியம், இரவு வேளைகளில் நம்மை செபிக்க அழைப்பது தான் மூவேளைச் செபம் அல்லது திரிகாலச் செபம் என அழைக்கப்படுகிறது. முதன் முதலில் இந்த செபமானது மாலை நேரத்தில் மூன்று மங்கள வார்த்தை செபத்துடன் மட்டுமே கூறப்பட்டது. பின்னர் 13ம் நூற்றாண்டில் காலையிலும், மதியமும் கூறும் பழக்கம் ஏற்பட்டது. இதில் முதலில் வானதூதரின் செய்தியையும், இரண்டாவது அன்னை மரியின் பதிலுரையும் மூன்றாவது இயேசு மனுவுருவானதையும் நினைவு கூறுகிறோம். நம் ஒவ்வொருவரையும் மீட்க இறைவனின் அருள் பெறும் செபத்தோடு மூவேளை செபம் முடிவடைகிறது. இச்செபத்தை இடை இடையே வரும் மங்கள வார்த்தை செபத்தை விடுத்து இப்போது சொல்லக் கேட்போம்;

ஆண்டவருடைய தூதர் மரியாவுக்கு தூதுரைத்தார்.
அவர் தூய ஆவியினால் கருத்தாங்கினாள்

இதோ ஆண்டவருடைய அடிமை
உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்

வார்த்தை மனுவுருவானார்
நம்மிடையே குடி கொண்டார்

இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்களாகும் படியாக இறைவனின் புனித அன்னையே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

**மன்றாடுவோமாக:**

இறைவா, வானதூதர் அறிவித்தபடியே உம்முடைய திருக்குமாரன் இயேசுகிறிஸ்து மனிதனானதை நாங்கள் அறிந்துள்ளோம். அவருடைய பாடுகளினாலும், மீட்பினாலும் நாங்கள் அவருடைய உயிர்ப்பின் மேன்மையை அடைய அருள்புரிவீராக, ஆமென்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

**நீ செய்த நன்மை நினைக்கின்றேன் - என்**

**நெஞ்சுருக நன்றி சொல்கின்றேன் இறைவா - 4 (2)**

**உண்டிட உணவும் உடையுமே கொடுத்து**

**ஒரு குறையின்றிக் காத்து வந்தாய் (2) - ஓர்**

**அன்னையைப் போலவே அன்பினைப் பொழிந்து**

**அல்லல்கள் யாவையும் தீர்த்து வைத்தாய் - 2**

**மலருக்குப் பதிலாய் களையெங்கும் தோன்றி**

**மனதினை நிரப்புதல் பார்த்திருந்தாய் (2)- உடன்**

**உலரட்டும் என்றே ஒதுக்கிவிடாமல்**

**களைகளை அகற்றிக் காத்திருந்தாய் - 2**